Before the Court of Chief Judicial Magistrate Cum Special judge, Kanyakumari District @ Nagercoil.

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section [redacted]) 173 BNSS
(குற்றவியல் நடைமுறைச் சட்டம் 154 இன் கீழ்)

C 8167264

1. District / மாவட்டம் : Kanyakumari
PS / காவல்நிலையம் : Vigilance and Anticorruption.
Year / ஆண்டு : 2024
FIR No. / மு.த.அ எண் : 06
Date / நாள் : 20/07/2024

2. (i) Act சட்டம் : — Sections பிரிவுகள் : —
(ii) Act சட்டம் : Prevention of Corruption Act 1988 as amended in 2018 — Sections பிரிவுகள் : 7
(iii) Act சட்டம் : — Sections பிரிவுகள் : —
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 19/07/2024
Date from : நாள் முதல்
Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Before 12.10 hrs
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20/07/2024
Time : நேரம் 09.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS : குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Unnamalai Kadai Town Panchayat About 45 kms West
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. வானமாமலை
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் ஆய்வுக்குழு அலுவலர்
(g) Address : முகவரி திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்கள்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. திரு. R. சாம் செல்வராஜ், இளநிலைபொறியாளர், உண்ணாமலைகடை பேரூராட்சி 2. திரு. P. ஹரிகரன், ஓவர்சியர், கிள்ளியூர் பேரூராட்சி. [ஒப்பந்ததாரர்கள்] 3. திரு. சேகர் 4. திரு. G. விஜயராஜன் 5. திரு. S. பிராங்கிளின் 6. திரு. T. ரவீந்திரன்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheet Enclosed

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr. S. John Benjamin Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 [signature] 20.7.24
Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] ADSP 20/07/2024
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court: 20/07/2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 11.30hrs.

Name பெயர் G. HECTOR DHARMA RAJ
Rank நிலை Addl. Superintendent of Police, Vigilance & Anti-Corruption, Kanyakumari.
No. எண் ........

கன்னியாகுமரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 6/2024 முதல் தகவல் அறிக்கை வரிசை எண் 12 –ன் இணைப்பு.

மதிப்பிற்குரிய அய்யா,

| | |
|---|---|
| குற்ற அலுவலர்கள் :-<br><br>1.திரு. R.சாம் செல்வராஜ்,<br>வயது- 53/24,<br>த.பெ.G.ரத்தினசாமி<br>இளநிலை பொறியாளர்,<br>உ ண்ணாமலைகடை பேரூராட்சி,<br>கன்னியாகுமரி மாவட்டம்.<br><br>2.திரு.P.ஹரிகரன், வயது 50/24<br>த.பெ.பத்மநாபன்<br>ஓவர்சீயர்<br>கிள்ளியூர் பேரூராட்சி,<br>கன்னியாகுமரி மாவட்டம்.<br><br>**ஒப்பந்ததாரர்கள்**<br><br>3. திரு.R.சேகர், வயது 54/24<br>த.பெ.ராமசாமி<br>13/89 A வெள்ளிவிளாகம்<br>விரிகோடு அஞ்சல்.<br><br>4. திரு.G.வினுராஜன், வயது 45/24<br>த.பெ.ஞானசிகாமணி<br>புத்தன்தெருவிளை<br>உண்ணாமலைகடை.<br><br>5. திரு.S.பிரான்சிஸ், வயது 59/24<br>த.பெ.சிலுவைராஜு<br>கிரேஸ் கார்டன்<br>ரீத்தாபுரம்.<br><br>6. திரு.T.ரவீந்திரன், வயது 57/24<br>த.பெ.தங்கமணிநாடார்<br>17/106 கள்ளிதட்டு<br>முழங்குழி அஞ்சல். | பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :-<br>இன்று 20.07.2024 காலை 09.00 மணிக்கு கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் கூடுதல் கண்காணிப்பாளர் G.ஹெக்டர் தர்மராஜ் ஆகிய நான் நிலையத்தில் பணியிலிருந்த போது திரு.A.வானமாமலை, ஆய்வுகுழு ஆய்வாளர், கன்னியாகுமரி தென்காசி திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன், உண்ணாமலைகடை பேரூராட்சி அலுவலகத்தில் தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கை நாள். 19.07.2024 மற்றும் பணம் ரூ.5,34,000/- ஆகியவற்றை இணைத்து நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:-<br>அனுப்புநர் திரு.A.வானமாமலை, ஆய்வுக்குழு ஆய்வாளர், திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள்<br>பெறுநர் காவல் கூடுதல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில்.<br>அய்யா, நான் எனது மேலதிகாரியின் உத்தரவின்படி 19.07.2024 அன்று காலை சுமார் 08.00 மணிக்கு நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்திற்கு வந்து நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் கூடுதல் கண்காணிப்பாளராகிய தங்களை சந்தித்தேன். அப்போது |

நீங்கள் என்னிடம் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள உண்ணாமலைக்கடை, நல்லூர் மற்றும் கிள்ளியூர் பேரூராட்சிகளின் இளநிலை பொறியாளர் திரு.ஆர்.சேம் செல்வராஜ் என்பவர் தன்னுடைய கட்டுபாட்டில் உள்ள பேரூராட்சிகளில் நடைபெறும் பணிகளுக்கு அளவு புத்தகம் எழுதி பில் கிளைம் செய்து கொடுக்க தனக்கும் உதவி செயற்பொறியாளர் திருமதி.புஸ்பலதா அவர்களுக்கு வழக்கமாக ஒப்பந்ததாரர்களிடம் இருந்து லஞ்சமாக கமிஷன் தொகையை உண்ணாமலைகடை பேரூராட்சி அலுவலகத்தில் வைத்து வழக்கமாக பெற்று வருகிறார் என்று தங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் மேற்படி அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வேண்டும் என்று என்னிடம் விளக்கிக் கூறினீர்கள். அதன்படி 19.07.2024-ம் தேதி காலை சுமார் 09.00 மணிக்கு ஆய்வு குழு ஆய்வாளராகிய நானும், காவல் கூடுதல் கண்காணிப்பாளராகிய தாங்களும், காவல் ஆய்வாளர்கள் திருமதி.சிவசங்கரி, திருமதி.ரெமா மற்றும் காவலர்கள் சகிதம் அரசு வாகனம் TN-21 AG 0777 Bolero, மற்றும் இருசக்கர வாகனங்களில் நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு காலை சுமார் 10.00 மணியளவில் விரிகோடு ரயில்வே கிராசிங் அருகில் ஆங்காங்கே வாகனங்களை நிறுத்தி விட்டு எல்லோரும் வாகனங்களில் இருந்து இறங்கி உண்ணாமலை கடை பேரூராட்சி அலுவலகத்தின் அருகில் ஆங்காங்கே மறைந்து இருந்து ஒப்பந்ததாரர்களின் நடமாட்டத்தை கண்காணித்து வந்தோம். பின்னர் சுமார் 12.00 மணியளவில் நானும் மற்றும் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளினர்கள் உண்ணாமலைகடை பேரூராட்சி அலுவலக வளாகத்திற்குள் நுழைந்தோம். பேரூராட்சி அலுவலக கட்டிடத்தின் முன்பு இடதுபுறம் நிறுத்தப்பட்டிருந்த சிகப்பு நிற TN-75 H 8181 Maruthi Swift காரின் முன்பு வலது பக்கவாட்டில் நின்று கொண்டிருந்த 3 நபர்களிடம் நான் விசாரிக்க அதில் பச்சை மஞ்சள் வெள்ளை நிறம் கலந்த கட்டம் போட்ட அரைக்கை சட்டை போட்டிருந்த நபர் தான் இளநிலை பொறியாளர் திரு.சாம் செல்வராஜ் என்று தெரிவித்தார். நான் இளநிலை பொறியாளர் திரு.சாம் செல்வராஜை அவருடைய அலுவலக அறைக்கு அழைத்து செல்ல சொன்னதன் பேரில் இளநிலை பொறியாளர் திரு.சாம் செல்வராஜ் உண்ணாமலைகடை பேரூராட்சி அலுவலக வளாகத்தில் பேரூராட்சி அலுவலக கட்டிடத்திற்கு அருகில் இருக்கும் சமுதாய நலகூடத்திற்கு

அழைத்து சென்று தன்னுடைய இருக்கையை காண்பித்தார். அவரை நான் சோதனை செய்த போது அவரது பேண்டின் பின்புற வலது பக்க பாக்கெட்டில் இருந்த மணிபர்சை எடுத்து ஆஜர் செய்தார். அந்த மணிபர்ஸை சோதனை செய்தபோது அதில் ரூ.20.000 காணப்பட்டது. இந்தப்பணம் பற்றி திரு.சாம் செல்வராஜ் அவர்களிடம் கேட்ட போது தனது வாகன பழுதுபார்ப்பிற்கு வைத்திருப்பதாக தெரிவித்தார். அவர் கூறிய பதில் சரியான முகாந்திரம் இல்லாததால் அந்த பணம் ரூ.20.000 ஒப்பந்ததாரர்களிடம் இருந்து லஞ்சமாக பெற்ற பணம் என்று கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து அவரது இடது பக்க இருக்கையில் அமர்ந்திருந்த கிள்ளியூர் பேரூராட்சியில் ஓவர்சியர் ஆக பணிபுரியும் ஹரிஹரன் என்பவரது மணிபர்ஸை சோதனை செய்த போது ரூ. 9500/- காணப்பட்டது. இந்த பணம் குறித்து சரியான முகாந்திரம் ஹரிஹரன் கூறாத காரணத்தினால் மேற்படி பணம் லஞ்ச பணம் என்று கருதி விசாரணைக்காக கைப்பற்றபட்டது. அந்த அறையில் நின்று கொண்டிருந்த உண்ணாமலைகடை பேரூராட்சி அரசு ஒப்பந்தகாரர்கள் திரு.சேகர் மற்றும் திரு. விஜுராஜன் ஆகிய இருவரிடமிருந்தும் சோதனையின் போது கிடைத்த முறையே ரூ.23000/- மற்றும் ரூ.3.000/- பணத்திற்கு கூறிய விளக்கம் சரியான முகாந்திரம் இல்லாததால் இளநிலை பொறியாளர் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி விசாரணைக்காக கைப்பற்ற பட்டது. மேலும் 19.07.2024 திரு.சாம் செல்வராஜ் அவர்கள் உண்ணாமலைக்கடை பேரூராட்சி அலுவலகத்திற்கு வருவதற்கு பயன்படுத்திய TN.75 H 8181 என்ற மாருதி ஸ்விப்ட் காரை சோதனை செய்த போது அந்த காரின் ஓட்டுநர் இருக்கைக்கு பின் புறம் சீட் கவர் பாக்கெட்டில் ஒரு நீல நிறத்தில் வெள்ளை பூ போட்ட பை காணப்பட்டது. அந்த பையை எடுத்து சோதனை செய்த போது அதில் ரூ.3.53.000/- காணப்பட்டது. இந்த பணம் குறித்து திரு.சாம் செல்வராஜ் அவர்களிடம் கேட்ட போது Fees கட்ட கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து வைத்திருப்பதாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் சரியான முகாந்திரம் இல்லாததால் மேற்படி பணம் அவர் ஒப்பந்ததாரர்களிடம் இருந்து பெற்ற லஞ்ச பணம் என்று கருதி விசாரணைக்காக கைப்பற்றபட்டது. மேலும் அந்த காரின் பின் பக்க டிக்கியை திறந்து சோதனை செய்த போது வேர்கிளம்பி பேரூராட்சியில் உள்ள

வேலைகளுக்கான எஸ்டிமேட் கோப்புகள் காணப்பட்டது. அதை சோதனை செய்த போது அந்த கோப்புகளின் இடையே 500 ரூபாய் நோட்டு கட்டு ஒன்று காணப்பட்டது. அதை எடுத்து எண்ணி பார்த்த போது ரூபாய் 50,000/- காணப்பட்டது இந்த பணம் பற்றி அவரிடம் கேட்ட போது சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் அந்த பணமும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து வேலை முடித்து பட்டியல் வழங்குவதற்கு பெறப்பட்ட லஞ்சபணமாக இருக்கலாம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றுபட்டது. மேற்படி சோதனை நடைபெற்று கொண்டிருக்கும் போது திரு.சாம் செல்வராஜ் அவர்களை சந்திக்க வந்த உண்ணாமலைகடை பேரூராட்சியின் அரசு பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் பிரான்சிஸ் அவர்களை சோதனை செய்த போது ரூ.65,500 இருந்தது. மேற்படி பணம் வைத்துள்ளமைக்கான காரணம் பிரான்சிஸ் சரியாக தெரிவிக்காத காரணத்தினால் அந்த ரூ.65,500/- அவர் இளநிலை பொறியாளர் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி விசாரணைக்காக கைப்பற்ற பட்டது. அதே வேளையில் திரு.சாம் செல்வராஜ் அவர்களை சந்திக்க வந்த உண்ணாமலைகடை பேரூராட்சியின் அரசு பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் ரவீந்திரன் அவர்களை சோதனை செய்த போது ரூ10000/- காணப்பட்டது. மேலும் அவரிடம் இருந்த ரூ. 10000/- காக அவர் கூறிய விளக்கம் சரியான முகாந்திரம் இல்லாததால் அந்த பணம் ரூ.10000/- அவர் இளநிலை பொறியாளர் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி விசாரணைக்காக கைப்பற்ற பட்டது. இதன்மூலம் உண்ணாமலைகடை பேரூராட்சியின் இளநிலை பொறியாளர் திரு.சாம் செல்வராஜ் மற்றும் ஓவர்சீயர் திரு.ஹரிகரன் ஆகியோர் அவர்களது கட்டுபாட்டின் கீழ் உள்ள பேரூராட்சிகளில் நடைபெறும் வேலைகளுக்கு அளவீடு செய்து அளவு புத்தகத்தில் எழுதி பட்டியல் தொகை வழங்க ஒப்பந்தகாரர்களிடமிருந்து லஞ்சம் பெற்றுவருவது (Criminal Misconduct) தெளிவாக தெரியவருகிறது. அரசு ஒப்பந்ததாரர்கள் அரசு ஊழியர்களுக்கு அரசு பணியினை செய்வதற்கு லஞ்சம் கொடுத்ததும் தெளிவாக தெரியவருகிறது. எனவே கைப்பற்றப்பட்ட லஞ்சப்பணம் ரூ.5,34,000/-, நீல நிறத்தில் வெள்ளை பூ போட்ட பை, மேற்படி பையினுள் இருந்த "*AD ஆபீஸ் S1*

சார்" என எழுதப்பட்ட துண்டு சீட்டு மற்றும் செயல்முறை நடவடிக்கை ஆகியவற்றை தக்க மேல்நடவடிக்கைக்காக எனது இந்த புகார் மனுவுடன் தங்களுக்கு சமர்ப்பிக்கிறேன். இளநிலை பொறியாளர் திரு.சாம் செல்வராஜ், ஓவர்சீயர் திரு.ஹரிகரன், ஒப்பந்ததாரர்கள் திரு.சேகர், திரு.G.விஜயராஜன். திரு.S.பிரான்சிஸ், திரு.T.ரவீந்திரன் ஆகியோர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். S/d 20.07.2024 (ஆ.வானமாமலை) ஆய்வுக்குழு ஆய்வாளர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம் கன்னியாகுமரி, தென்காசி, தூத்துக்குடி திருநெல்வேலி மாவட்டம். Sir, Received by me on 20.07.2024 at 09.00 hrs and registered a case in Kanyakumari Vigilance and Anti-Corruption Cr.No.6/2024 u/s. 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 on 20.07.2024 at 10.00 hrs S/d 20/07/2024. (G.HECTOR DHARMA RAJ) ADSP, V&AC, Kanyakumari.

The original FIR along with the complaint, Proceedings dated 19.07.2024 prepared at Unnamalaikadai Town Panchayat between 12.10 hrs to 22.00 hrs, Seized amount of Rs.5,34,000/-, seized documents and properties were sent to the Chief Judicial Magistrate cum Special Judge, Kanyakumari District @ Nagercoil for the trial offences under PC Act cases and the copies sent to the concerned officers.

ADSP 20/07/2024

Addl. Supdt. of Police
Vigilance and Anti Corruption
Kanyakumari Detachment
@ Nagercoil